# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 73/மா/2023**

**நாள் : 17. 07.2023**

திரு. R. மணிகண்டன்,
கரூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கரூர் மாநகராட்சி, கரூர். – எதிர்மனுதாரர்

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவு எண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மணிகண்டன் என்பவரின் 20.03.2023 நாளிட்ட மனு, 23.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 73/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவு எண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மணிகண்டன் என்பவர் தனது 20.03.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" கே.எம்.வேலுச்சாமி என்ற நபர், 44வது வார்டில், உள்ள மனை எண் (Plot No.61) 2400 சதுர அடி அளவுள்ள தனது இடத்தில், மாநகராட்சியிடம் VACANT LAND PROPERTY TAX செலுத்தாமல் VAIRAPERUMAL STEEL என்ற பழைய இரும்பு கடையை நடத்துவதோடு மட்டுமல்லாமல் VAIRAPERUMAL STEEL என்ற இரும்புகடைக்கு எவ்வித Professional Tax மற்றும் Trade License போன்ற எவ்வித வரிகளையும் செலுத்தாமல் முறைகேடு செய்து வருகிறார். தனது இடத்தில் உள்ள இரும்பு கடைக்கு உண்டான வணிக சொத்து வரி Commercial Property Tax மறைத்து மாநகராட்சிக்கு உரிய வரி செலுத்தாமல் கடந்த 10 ஆண்டுகளாக வரி ஏய்ப்பு செய்துள்ளார். Plot No.61, 2,400 சதுர அடி அளவுள்ள தனது இடத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சியிடம் எவ்வித முறையான கட்டிட Building Plan Approval மற்றும் வரைபட Layout approval ஆகிய அனுமதி பெறாமல் சுமார்

(20 x 15 ) அளவுள்ள அலுவலக கட்டிடத்தை கட்டியுள்ளார். இதன் மூலம் தனக்கு தெரிந்தே முறைகேடு செய்து அலுவலக கட்டிடத்தை கட்டியுள்ளார்.

எவ்வித முறையான கட்டிட Building Plan approval மற்றும் வரைபட Layout approval அனுமதி பெறாமலும் கட்டப்பட்ட அலுவலக கட்டிடம் மற்றும் உரிய அனுமதி இல்லாமல் இயங்கும் பழைய இரும்பு கடையை சீல் வைத்து உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சபரிநாதன் என்ற நபர் 44 வது வார்டில், உள்ள Plot No.8, 1,200 சதுர அடி அளவுள்ள தனது இடத்தில் 10ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சியிடம் Vacant Land Property Tax செலுத்தாமல் மாநகராட்சியிடம் எவ்வித முறையான கட்டிட Building Plan Approval மற்றும் வரைபட Layout Approval ஆகிய அனுமதி பெறாமல், சுமார் 60 x 20 அளவுள்ள கட்டிடத்தை கட்டியுள்ளார். இதன் மூலம் தனக்கு தெரிந்தே முறைகேடு செய்து அலுவலக கட்டிடத்தை கட்டியுள்ளார்.

சபரிநாதன் என்ற நபர் 44 வது வார்டில் உள்ள Plot No.8, 1,200 சதுர அடி அளவுள்ள தனது இடத்தில் மாநகராட்சியிடம் Vacant Land Property Tax செலுத்தாமல் Power Loom என்பதை நடத்துவதோடு மட்டுமல்லாமல் Power Loomக்கு உரிய எவ்வித Professional Tax மற்றும் Trade License போன்ற எவ்வித வரிகளையும் செலுத்தாமல் முறைகேடு செய்து வருகிறார். தனது இடத்தில் உள்ள Power Loomக்கு உண்டான, வணிக சொத்துவரி Commercial Property Tax மறைத்து, மாநகராட்சிக்கு உரிய வரி செலுத்தாமல் கடந்த 10ஆண்டுகளாக வரி ஏய்ப்பு செய்துள்ளார்.

எவ்வித முறையான கட்டிட Building Plan Approval மற்றும் வரைபட Layout Approval அனுமதி பெறாமலும் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் உரிய அனுமதி இல்லாமல் இயங்கும் Power Loom ஆகியவற்றை சீல்வைத்து உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கரூர் மாநகராட்சி, 44வது வார்டில் பாலாஜி நகர், Survey Number 535 பகுதியில் உள்ள மனை எண் தெரியவில்லை நாராயணன் (சபரிநாதன் என்பவரின் தங்கையின் மாமனார்) என்பவருக்கு சொந்தமான 1,200சதுர அடி அளவுள்ள தனது இடத்தில், மாநகராட்சியிடம் Vacant Land Property Tax செலுத்தாமல் மற்றும் வணிக சொத்துவரி Commercial Property Tax செலுத்தாமல் K.M. வேலுச்சாமி என்ற நபருக்கு வாடகைக்கு பழைய இரும்பு கடை என்ற தொழில் நிறுவனத்தை நடத்த அனுமதி வழங்கி உள்ளார்.

K.M.வேலுச்சாமி என்ற நபர் VAIRAPERUMAL STEEL என்ற பழைய இரும்பு கடையை மேற்கண்ட இடத்தில் மாநகராட்சியிடம் அனுமதி பெறாமல் நடத்துவதோடு மட்டுமல்லாமல் VAIRAPERUMAL STEEL என்ற பழைய இரும்பு கடைக்கு எவ்வித Professional Tax மற்றும் Trade License போன்ற எவ்வித வரிகளையும் செலுத்தாமல் முறைகேடு செய்து வருகிறார்.

மேலே குறிப்பிட்ட புகார்கள் சம்மந்தமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு மற்றும் முறைகேட்டில் ஈடுபட்ட நபர்கள் மீது மாநகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்காத காரணத்தால், மாநகராட்சி ஆணையர் மீது Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules படி, ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் இதர சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவத்தின் 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கரூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) கரூர் மாநகராட்சி ஆணையர் தனது 02.05.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.44 பொன்நகரில் மனை எண்.61ல் 2,400 சதுரடி அளவுள்ள இடத்தில் திரு.கே.எம்.வேலுச்சாமி என்பவர் காலிமனை வரி, சொத்துவரி அவ்விடத்தில் வைரப்பெருமாள் பழைய இரும்பு கடை நடத்துவதற்கு தொழில் வரி,தொழில் உரிமம், வணிக சொத்து வரி, மனை அனுமதி மற்றும் கட்டிட அனுமதி பெறாமல் 20x15அளவில் இயங்கும் பழைய இரும்பு கடை மீது உரிய நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகாருக்கு திரு கே.எம்.வேலுச்சாமி என்பவருக்கு இவ்வலுவலகம் மூலம் 20.04.2023ம் தேதியில் அறிவிப்பு அனுப்பி 25.04.2023ம் தேதி பதில் பெறப்பட்டது. அதில் மனை எண்.61ற்கு காலியிட வரி விதிப்பு எண்.082/044/903384 dt. 04.05.2023ல் அரையாண்டிற்கு ரூ.2,112/- வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதில் சிறிய அளவில் உள்ள அலுவலக கட்டிடத்திற்கு வணிகவரி விதிப்பு எண்.082/044/903389 dt. 04.05.2023ல் அரையாண்டிற்கு ரூ.3,073/- கதவு எண்.61 என சொத்து வரி விதிப்பு உள்ளது. இம்மனையில் உள்ள வைரப்பெருமாள் பழைய இரும்பு கடைக்கு தொழில் வரி விதிப்பு எண்.082/044/00872 தொழில் வரி உள்ளது. தொழில் உரிமம் Registration No.082/01/12/22-23/0014149 dt. 04.05.2023, Demand Notice No.082/2023/01/044/00111, Trade License வரி விதிப்பு உள்ளது. மேலும் மனை எண்.61ற்கு தாந்தோன்றி கிராமம் சர்வே எண்.561/1ல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண்.355/89 ஆகும். புகாரில் குறிப்பிட்டுள்ள கட்டுமானம் AC sheet கூரையுடன் 20 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடம் ஆகும். அக்கட்டிடத்திற்கு அனுமதி பெறப்பட்ட விபரம் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது ஏதும் புதிதாக கட்டிடம் கட்டப்படவில்லை.

புகார் மனுவில் தெரிவித்துள்ள திரு.சபரிநாதன் என்பவருக்கு மனை எண்.8-ல் பத்து ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சியிடம் காலியிட வரி, சொத்துவரி, கட்டிட அனுமதி, மனைப் பிரிவு அனுமதி பெறாமல் 60 x 20 அளவில் கட்டிடம் கட்டியுள்ளார். அக்கட்டிடத்தில் Power Loom உரிய தொழில் வரி மற்றும் தொழில் உரிமம் கட்டாமல் இயங்கி வரும் Power Loomக்கு உரிய நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகாருக்கு திரு.சபரிநாதன் என்பவருக்கு இவ்வலுவலகம் மூலம் 20.04.2023ம் தேதியில் அறிவிப்பு அனுப்பி 25.04.2023ம் தேதி பதில்பெறப்பட்டது. அதில் மனை எண்.8ற்கு காலியிட வரிவிதிப்பு எண்.082/044/903387dt.04.05.2023 திரு.எம்.மாணிக்கம் என்பவர் பெயரில் காலியிட வரிவிதிப்பு உள்ளது. இக்கட்டிடத்திற்கு தொழில் கூடம் பயன்பாட்டில் வரிவிதிப்பு எண்.082/044/903388 dt. 04.05.2023, கதவு எண்.8 அரையாண்டிற்கு ரூ.10,490/- வரிவிதிப்பு தொகை உள்ளது. தொழில் வரி விதிப்பு எண்.082/044/900873 dt.04.05.2023 உள்ளது. தொழில் உரிமம் Business Name Handlooms, Registration No.082/01/12/22-23/0014148 dt. 04.05.2023 Demand Notice No.082/2023/01/044/00112 dt.04.05.2023,

Trade License வரிவிதிப்பு உள்ளது. தாந்தோன்றி கிராமம் சர்வே எண்.561/1ல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண்.355/89 ஆகும். புகாரில் குறிப்பிட்டுள்ள கட்டுமானம் AC sheet கூரையுடன் கூடிய பக்கசுவர் இல்லாத 15 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடம் ஆகும். அக்கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்ட விபரம் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது புதிதாக கட்டிடம் கட்டப்படவில்லை.

மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள கரூர் மாநகராட்சி வார்டு எண்.44, பாலாஜி நகர் சர்வே எண்.535ல் திரு.நாராயணன் என்பவருக்கு சொந்தமான 1,200 சதுர அடி அளவுள்ள இடத்தில் மாநகராட்சியிடம் காலியிட வரி, வணிக சொத்து வரி செலுத்தாமல் திரு.கே.எம்.வேலுச்சாமி என்ற நபருக்கு பழைய இரும்பு கடை நடத்த அனுமதி வழங்கியுள்ளார். அந்த வைரப்பெருமாள் பழைய இரும்பு கடைக்கு தொழில் வரி மற்றும் தொழில் உரிமம் செலுத்தாமல் உள்ளதற்கு நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார்.

புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் 2,400 சதுரடி ஆகும். இச்சதுரடிக்கு காலிமனை வரிவிதிப்பு எண். 082/044/903386 dt/04.05.2023ல் அரையாண்டிற்கு வரி விதிப்பு தொகை ரூ.2,112/– ஆக உள்ளது. இம்மனையில் கட்டிடம் ஏதும் இல்லாததால் வணிக சொத்துவரி விதிப்பு செய்யப்படவில்லை. இம்மனையில் உள்ள வைரப்பெருமாள் இரும்பு கடைக்கு தொழில் வரிவிதிப்பு எண்.082/044/900872 dt. 04.05.2023ல் உள்ளது. தொழில் உரிமம் Business Name. Palaya Irumbu Viyabaram, Sub trade name. Other Traders, Registration No.082/01/12/22–23/0014149 dt.04.05.2023 Demand notice No.082/2023/01/044/00111 dt.04.05.2023, Trade License வரி விதிப்பு உள்ளது. இம்மனை வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ளது. மேலும் இருதரப்பினருக்குள் கரூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு எண்.OS.No.86/2023 என்ற சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று முறைமன்ற நடுவம் முறையீட்டு (எண்.73/C/2023) மனுவில் உள்ள புகாரை தள்ளுபடி செய்து உரிய நீதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் 15.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"கரூர் மாவட்டம், கரூர் மாநகராட்சி வார்டு எண்.44, பொன்நகரில், திரு.கே.எம்.வேலுச்சாமி என்பவருக்கு சொந்தமான மனை எண்.61, 2,400 சதுர அடி உள்ள இடத்தில் வைரப்பெருமாள் ஸ்டீல்ஸ் என்கின்ற இரும்புக்கடையை நடத்தி வருகிறார். மேற்கண்ட கடைக்கான வணிகத்திற்குண்டான சொத்துவரி மற்றும் தொழில் வரியை செலுத்தாமலும், வர்த்தக உரிமை (Trade License) எதையும் பெறாமலும் மேற்கண்ட இரும்புக்கடையை நடத்தி வருகிறார். மேலும் மேற்கண்ட இரும்புக்கடை அமைந்துள்ள கட்டடத்திற்கு எவ்வித ஒப்புதலும் மாநகராட்சியிடமிருந்து திரு வேலுச்சாமி பெறவில்லை. அனுமதியில்லாமல் இயங்கி வரும் மேற்கண்ட இரும்புக்கடையின் மீது நடவடிக்கை எடுத்திடுமாறு மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பியும், மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மாநகராட்சியின் எவ்வித அனுமதியும் பெறாமல் இயங்கி வரும் மேற்கண்ட இரும்புக்கடையின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், மாநகராட்சியின் வருவாய் இழப்பிற்கு காரணமான மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாநகராட்சியின் மீதான எனது குற்றச்சாட்டுக்கள் குறித்து என்னால் சமர்ப்பிக்கப்படும் 15.06.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விபரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மேலும் மனுதாரர் தனது 15.6.2023 நாளிட்ட அறிக்கையில் மற்றவற்றிற்கிடையில் தான் இம்முறைமன்ற நடுவத்திற்கு 20.3.2023 நாளிட்ட மனு அளித்த பிறகே காலியிட வரி, வணிக வரி, தொழில் வரி விதிக்கப்பட்டுள்ளது மற்றும் தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றும் எனவே மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

**7) கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் 15.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" மனுதாரர் குறிப்பிட்டுள்ள கரூர் மாநகராட்சி வார்டு எண்.44 பொன்நகரில் மனை எண்.61ல் வரி விதிப்பு எண்.082/044/903384 என காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனையின் ஒரு பகுதியில் உள்ள வைரப்பெருமாள் பழைய இரும்புக்கடைக்கு 04.05.2023 முதல் தொழில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. (வரி விதிப்பு எண். 082/044/00873) மேலும் மேற்கண்ட கடைக்கு Trade License வரிவிதிப்பு உள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட கடை மற்றும் இரும்புக்கடை அமைந்துள்ள கட்டிடம் 20 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டடம் என்பதாலும் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடம் மீது மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கரூர் மாநகராட்சி ஆணையரின் 02.05.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8) இந்நேர்வில் மனுதாரரின் மனு, வாக்குமூலம், கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன.

மனுதாரர் தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

i) திரு.கே.எம்.வேலுச்சாமி என்பவர் மனை எண்.61ல் வைரப்பெருமாள் ஸ்டீல்ஸ் என்கின்ற இரும்புக்கடையை நடத்தி வருகிறார். கடை அமைந்துள்ள கட்டடத்திற்கு ஒப்புதல் பெறப்படவில்லை. மேலும் சொத்துவரி, தொழில் வரி, Trade License எதையும் பெறாமல் இரும்புக்கடையை நடத்தி வருகின்றார்.

ii) திரு.சபரிநாதன் என்பவர் மனை எண்.8ல் உள்ள அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தில் Power Loomக்கு, உரிய தொழில் வரி, சொத்து வரி, மற்றும் கட்டட அனுமதி பெறாமலும் நடத்தி வருகிறார்.

iii) சர்வே எண்.535ல் திரு.நாராயணன் என்பவர் தனக்கு சொந்தமான 1,200 சதுர அடி அளவுள்ள இடத்தை மாநகராட்சிக்கு காலியிட வரி, வணிக சொத்து வரி செலுத்தாமல் திரு கே.எம்.வேலுச்சாமி என்பவருக்கு பழைய இரும்புக்கடை நடத்த அனுமதி வழங்கியுள்ளார்.

கரூர் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் திரு. கே.எம்.வேலுச்சாமி மனை எண்.61க்கு காலியிட வரிவிதிப்பு எண்.082/044/903384ல் அரையாண்டிற்கு ரூ.2,112/– வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் சிறிய அளவில் உள்ள அலுவலக கட்டடத்திற்கு வணிகவரி விதிப்பு எண்.082/044/903389ல் அரையாண்டிற்கு ரூ.3,073/– என சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் இம்மனையில் உள்ள வைரப்பெருமாள் இரும்புக்கடைக்கு தொழில் வரிவிதிப்பு எண்.082/044/00872 எனவும் தொழில் உரிமம் Registration எண்.082/01/12/22–23/0014149 Demand Notice No.082/023/01/044/00111 Trade License வரிவிதிப்பு உள்ளது என்றும் மேலும் புகாரில் குறிப்பிட்டுள்ள மனை எண்.61ல் உள்ள கட்டுமானம் AC sheet கூரையுடன் 20 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டடம் என்றும் அக்கட்டடத்திற்கு அனுமதி பெறப்பட்ட விவரம் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் தற்போது அங்கு புதிதாக கட்டடம் கட்டப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

திரு.சபரிநாதன் மனை எண்.8ற்கு காலியிட வரிவிதிப்பு எண்.082/044/903387 திரு. எம்.மாணிக்கம் என்பவர் பெயரில் காலியிட வரிவிதிப்பு உள்ளது என்றும் இக்கட்டடத்திற்கு தொழில்கூடம் பயன்பாட்டில் வரிவிதிப்பு எண்.082/044/903388 கதவு எண்.8 அரையாண்டிற்கு ரூ.10,490/– வரி விதிப்பு தொகை உள்ளது எனவும் தொழில் உரிமம் Business Name Handlooms. Registration No.082/01/12/22-23/0014148. Demand Notice No.082/2023/01/044/00112 Trade Licence வரிவிதிப்பு உள்ளது என்றும் புகாரில் குறிப்பிட்டுள்ள கட்டுமானம் AC sheet கூரையுடன் கூடிய பக்கசுவர் இல்லாத 15 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம் என்றும் அந்த கட்டடத்திற்கு அனுமதி விபரம் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தற்போது புதிதாக கட்டடம் கட்டப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சர்வே எண். 535ல் திரு.நாராயணன் என்பவருக்கு சொந்தமான இடத்திற்கு காலிமனை வரிவிதிப்பு எண்.082/044/903386ல் அரையாண்டிற்கு வரிவிதிப்பு தொகை ரூ.2,112/– ஆக உள்ளது. இம்மனையில் கட்டடம் ஏதும் இல்லாததால் வணிக சொத்துவரி விதிப்பு செய்யப்படவில்லை. இம்மனையில் உள்ள வைரப்பெருமாள் இரும்பு கடைக்கு தொழில் வரி விதிப்பு எண்.082/044/900872 உள்ளது. தொழில் உரிமம் Business Name Palaya Irumbu Viyabaaram, Sub trade name, other traders Registeration No.082/01/12/22-23/0014149 Demand Notice No.082/2023/01/044/00111, Trade License வரி விதிப்பு உள்ளது. இம்மனை வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு 7- The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மாநகராட்சியானது வைரப்பெருமாள் ஸ்டீல்ஸ் என்ற பெயரில் உள்ள பழைய இரும்பு கடைக்கு மனுதாரர் முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளிக்கும் முன் வரி விதிப்பு ஏதும் செய்யப்படவில்லை எனவும் புகார் அளித்த பின்னரே 01.04.2017 முதல் காலியிட வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் 26.04.2023 அன்று 01.04.2021 முதல் வணிக பயன்பாட்டில் சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் தொழில் உரிமம் 27.04.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும் சபரிநாதன் என்பவரின் விசைத்தறி தொழிற்கூடத்திற்கும் புகார் அளிக்கும் முன் வரி விதிப்பு செய்யப்படவில்லை எனவும் மனுதாரர் புகார் அளித்தபிறகே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் 26.04.2023 அன்று 01.04.2023 முதல் வணிக பயன்பாட்டில் சொத்துவரி செய்யப்பட்டுள்ளது என்றும் தொழில் உரிமம் 27.04.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும் அதேபோல் நாராயணன் என்பவர் பெயரில் உள்ள இடத்திற்கும் 01.04.2017 முதல் காலியிட வரிவிதிப்பு 26.04.2023 அன்று செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது மனுதாரர் குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் உள்ளதை இது தெளிவாக்குகின்றது. மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகள் பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ள நிலையில் அதனை கண்டும் காணாமல் மாநகராட்சி அலுவலர்கள் அலட்சியமாக இருந்துள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. கரூர் மாநகராட்சிக்கு ஏதேனும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்த விவரங்களை கண்டறிந்து அதற்கு உடந்தையாய் இருந்துள்ள அலுவலர்கள் கண்டறியப்பட வேண்டும். பல ஆண்டுகளாக கரூர் மாநகராட்சிக்கு வரி இனங்களின் மூலம் மற்றும் இதர இனங்களிலிருந்து வரவேண்டிய வருவாய் இழப்பிற்கும் காரணமாக இருந்துள்ள சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய முடிவு செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Corporation field officials have defaulted in not levying Property Tax, Professional Tax besides vacant land tax till the receipt of the petition in the Forum that exposes their complicity, collusion, and abetment. Severe disciplinary action should be launched against all the delinquents involved in this issue that has caused substantial loss of revenue to the Karur Corporation. All these plots should be inspected by the Corporation officials concerned as per the terms and conditions of Town and Country Planning Act provisions and follow up action should be pursued without any delay. The Corporation cannot take refuge under the pretext that a civil case is pending and dodge its responsibility tantamount to dereliction of duties and

abetment of the offence. No stay orders have been issued by the Court in the matter. The loss of revenue to the Karur Corporation for the years which was not levied by the Corporation should be recovered from the persons concerned including the Corporation field officials who are delinquents in the matter. The DMA is directed to watch the steps to be taken by the Karur Corporation in the light of the Forums' orders and send an action taken report to this office in due course. Necessary instructions should be issued to all Corporations to prevent this type of visible loss of revenue to the exchequer by sheer indifference, inaction and collusion of the field functionaries in charge of this task. This is an instance of the fence eating the crop.

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மணிகண்டன்,
   கதவுஎண்.69I/7E4,
   நான்காவது தெரு,
   பாரதிதாசன் நகர்,
   தாந்தோன்றிமலை,
   கரூர்.

2. ஆணையர்,
   கரூர் மாநகராட்சி,
   கரூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

17/7/23

செயலாளர்(முகூபொ)

17.7.23